திரு. எஸ். முருகையன் : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் நடைபெறும் மருந்தகங்களில் பணி செய்யும் பணியாளர்களுக்கு அரசாங்கத்திலிருந்து சம்பளம் கொடுக்கிறோம். ஏறக்குறைய ஒவ்வொரு மருந்தகங்களிலும் வேலை செய்யும் பணியாளர்களும், நல்ல ஒரு எம்.பி.பி.எஸ். டாக்டரும் அங்கே இருக்கிறார்கள். வருஷத்திற்கு 15,000 ரூபாய் அளவில் சம்பளம் கொடுக்கிறோம். இருந்தாலும் ஒன்றியங்களால் 5,000 ரூபாய் அல்லது 6,000 ரூபாய் அளவிற்குத்தான் மருந்து வாங்கிக் கொடுக்கப்படுகிறது. 5,000, 6,000 ரூபாய் மருந்துக்காக 15,000 ரூபாய் செலவிலே சிப்பந்திகள் இருக்கிறார்கள். ஆகவே, ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கும் மருந்தகங்களை ஒன்று, அதிகப்படியாக மருந்து வாங்க ஏற்பாடு செய்ய வேண்டும், அல்லது அரசாங்கமே உடனடியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த விகிதாச்சாரக் கணக்கு சரியான அடிப்படையில் பிறப்பது அல்ல. மருந்துகளின் விலையைவிட மருந்தைக் கொடுக்கும் டாக்டர்கள், மருத்துவத் துறையைச் சார்ந்த அவர்களின் தொண்டின் விலையின் மதிப்பும் அதிகம். மிகப்பெரிய மருத்துவமனையாக யிருந்தாலும் மாவட்ட மருத்துவ மனைகளாகயிருந்தாலும் மருந்துக்கு ஆகும் செலவைவிட மருந்தைத் தருகின்ற நிபுணத்துவத்திற்கு ஆகும் செலவு அதிகம். அந்த அடிப்படையில் அது தவறு அல்ல.

திரு. என். கணபதி : தலைவரவர்களே, இந்த ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசாங்கம் எடுக்க படிப்படியாக அமல் படுத்தத் திட்டம் இருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தத் திட்டம் அமல் ஆக்கப்படுவதற்குமுன் இப்படிப்பட்ட ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் மக்களுக்கு நன்றாகப் பயன்படும் வகையில் இந்த மருந்தகங்களுக்குப் போக்குவரத்து வசதியும், டெலிபோன் வசதியும் செய்து தரப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, கேள்வி நல்ல நோக்கத்தோடு கூடியது. இப்பொழுது மாவட்ட மருத்துவ மனை அடிப்படையிலே இந்தப் பணி நடைபெறுகின்றது. இனி வட்டத்திற்கு வந்து, வட்டத்திலிருந்து யூனியனுக்கு வரும் காலத்தில் திரு. கணபதி அவர்கள் அந்தப் பலன்களைப் பெற முடியும்.

* 399. *Q.*—Thiru N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal with the Government to take over the rural dispensaries in major panchayats?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தற்போது பெரிய பஞ்சாயத்துக்களிலுள்ள ரூரல் டிஸ்பென்சரிகளை அரசு ஏற்கும் திட்டம் ஏதும் இல்லை.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, பஞ்சாயத்து ஒன்றியங்கள் நடத்தக்கூடிய அந்த மருந்தகங்களில் நகரங்களில் எத்தனை நடத்தப்படுகின்றன, கிராமப்புறங்களில் எத்தனை நடத்தப்படுகின்றன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இப்பொழுது நகரசபைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அப்படிப்பட்ட மக்கள் தொகை அதிகமாகவுள்ள இடங்களில் உள்ள டிஸ்பென்சரிகள், மருத்துவ மனைகள் பல ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியிருக்கின்றன. அதற்குப் பின்னால் முறைப்படுத்த வேண்டிய மிக நெருக்கடியான அவசியம் இருப்பதால் அதற்குப் பின்னால்தான் மேஜர் பஞ்சாயத்து அல்லது டவுன் பஞ்சாயத்துக்களில் உள்ள மருந்தகங்களைப் பற்றி எண்ணிப் பார்க்க முடியும். இப்படிப்பட்ட டவுன் பஞ்சாயத்து களுக்குப் பஞ்சாயத்து யூனியனோ, பஞ்சாயத்தோ, செலவை ஏற்பது மட்டும் அல்ல, அரசாங்கத்தில் 5,000 அல்லது 7,000 ரூபாய் என்று முறைப்படுத்தப்பட்டு வழங்கப்படுகிறது. அதற்குமேல் அரசு ஏற்றுக் கொள்ளும் பொறுப்பைப்பற்றி இனிதான் சிந்திக்க வேண்டும்.

Sheep Breeding Co-operative Societies.

* 400 Q.—THIRU B. VENKATASAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to start co-operative sheep-rearing credit societies in Dharmapuri district; and

(*b*) if so, when they will be started?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) வேளாண்மை மறுகடன் உதவிக் கடன் உதவியுடன் தருமபுரி மாவட்டம், கிலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்த குண்டு மாரனபல்லி கிராமத்தில் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை அமைப்பது குறித்த செயற்குறிப்பை கால்நடை வளர்ப்புத்துறை இயக்குநர் பணிந்தனுப்பி யுள்ளார்.

(இ) வேளாண்மை மறுகடன் உதவிக் கழகத்தின் ஒப்புதலும் அனுமதியும் கிடைப்பதன் மேல் இந்தச் சங்கம் அமைக்கப்படும்.

THIRU B. VENKATASAMY : The entire Dharmapuri district is having good potentialities to start co-operative sheep-rearing credit societies. May I request the Hon. Minister to start these sheep rearing co-operative societies in the entire Dharmapuri district?

THE HON. THIRU K. ANBAZHAGAN : No proposal can be for the entire Dharmapuri district. It is based upon the units that are formed, that is the co-operative units that are formed either in big village or in town. Here in this case it is only pending because the loan, that is the total amount of loan that is required is to be sanctioned by the concerned authorities.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த ஆடுவளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் நெல்லை மாவட்டத்தில் ஒருசில ஆண்டுகளுக்கு முன்பு இரண்டு ஆரம்பிக்கப்பட்டன. அதற்குப் பிறகும் சங்கங்கள் ஆரம்பிக்க வேண்டுமென்று மனுக்கள் பரிசீலனைக்காக அனுப்பப்பட்டிருக்கின்றன. பொதுவாக இந்த விவசாயிகளுக்கு ஆடுவளர்ப்பு என்பது ஒரு உப தொழிலாகவும், நிலமில்லாதவர் களுக்கு வருமானத்திற்கு வழி அளிப்பதாகவும் இருப்பதால் இதை அபிவிருத்தி செய்யவும், முடிந்த இடங்களில் கூட்டுறவுச் சங்கங்கள்